September 2021, Tamil

# கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி
## – ஸ்பைக்வேக்ஸ் (மாடர்னா)

### இந்தத் தடுப்பூசி உங்களுக்கு வழங்கப்படும்போது, நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்

தனித்துவமான புதிய கொரோனா வைரஸ் சுவாசக்குழாய் நோய்த்தொற்றை ஏற்படுத்துகிறது. பலருக்கு லேசான அல்லது மிதமான அறிகுறிகள் உண்டாகின்றன. ஆனால், சிலர் தீவிரமாக நோய்வாய்ப்படலாம். முதியவர்களும், ஏற்கனவே வேறு சில நோய்களைக் கொண்டவர்களும் தீவிரமாக நோய்வாய்ப்படும் அல்லது இறப்புக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளனர். கொரோனா வைரஸ் தடுப்பூசி கோவிட்-19 நோயைத் தடுக்கிறது. எனவே, இதன் முக்கிய குறிக்கோள் வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதாகும்.

### யாரெல்லாம் கொரோனா தடுப்பூசி போட வேண்டும்?

- தேசிய தடுப்பூசி திட்டத்தின் மூலம் தடுப்பூசியைப் பெற பரிந்துரைக்கப்படும் நபர்கள் அவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையில் இந்தத் தடுப்பூசி பெறலாம்.
- தடுப்பூசி இலவசம் மற்றும் இது தன்னார்வத்திற்கு உட்பட்டது. இது நார்வேயில் தங்கியிருக்கும் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

### இந்தத் தடுப்பூசியை நான் பெறுவது எப்படி?

யாருக்குத் தடுப்பூசி வழங்கப்படுகிறது, எப்படி தடுப்பூசி ஏற்பாடு செய்யப்படுகிறது, எப்போது நடக்கும் என்பது பற்றிய தகவல்களுக்கு உங்கள் நகராட்சியின் இணையதளத்தைப் பார்க்கவும்.

### இந்தத் தடுப்பூசி எப்படி வழங்கப்படும்?

தடுப்பூசி மேல் கையில் செலுத்தப்படுகிறது. தடுப்பூசி போடுவதற்கு முன், உங்களுக்கு உடல்நிலை எதுவும் சரியில்லாமல் இருக்கிறதா என்றும், உங்களுக்கு ஏற்கனவே போட்டுக்கொண்ட தடுப்பூசிகளுக்கு ஏதேனும் எதிர்வினைகள் இருந்ததா என்றும் கேட்கப்படும். உங்களுக்கு ஏற்கனவே கோவிட்-19 அல்லது கொரோனா வைரஸ் தடுப்பூசி போடப்பட்டிருந்தால், கர்ப்பமாக இருந்தால், ஏதேனும் மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது பிற உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் அவர்களிடம் சொல்ல மறக்காதீர்கள். உங்கள் குழுவிற்கு பொருந்தும் டோஸ்களின் எண்ணிக்கை மற்றும் டோஸ்களின் எண்ணிக்கைக்கு இடையிலான இடைவெளி பற்றிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும். தடுப்பூசி மையம் இதற்கு உங்களுக்கு உதவும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக அனைத்து டோஸ்களையும் போட்டு கொள்வது மிகவும் முக்கியம். கடுமையான வேறு நோய்கள் மற்றும் 38 °C க்கு மேல் காய்ச்சல் இருக்குமானால் தடுப்பூசி போடுவதை தள்ளிப்போடுவது நல்லது. தடுப்பூசி போட்ட பிறகு, குறைந்தபட்சம் 20 நிமிடங்களுக்கு தடுப்பூசி மையத்திலேயே காத்திருக்கும்படி கேட்கப்படுவீர்கள்.

### இந்த தடுப்பூசி எப்படி வேலை செய்கிறது?

இந்தத் தடுப்பூசியில் கொரோனா வைரஸில் உள்ள ஸ்பைக் புரோட்டீனை உண்டாக்கும் மூலப்பொருட்கள் (மெசஞ்சர் ஆர்என்ஏ) உள்ளது. நமது உடல் அபாயமற்ற ஸ்பைக் புரோட்டீன்களை உருவாக்கி, நமது நோயெதிர்ப்பு அமைப்பு பயிற்சி செய்ய வழங்குகிறது. இந்த வழியில், நோயெதிர்ப்பு அமைப்பு கொரோனா வைரஸின் ஸ்பைக் புரோட்டீன்களை அடையாளம் காண கற்றுக்கொள்கிறது. இதனால் வைரஸ் தொற்று ஏற்படும்போது அதிலிருந்து நமது உடலைப் பாதுகாக்க முடியும். மெசஞ்சர் ஆர்என்ஏ நமது உடலில் மிகவும் விரைவாக அழிக்கப்படும் என்பதால் நமது சொந்த மரபணு பொருட்களில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

தடுப்பூசியில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் வைரஸ் இல்லை மற்றும் கோவிட்-19 நோயை ஏற்படுத்தாது. கொரோனா வைரஸ் தடுப்பூசி நோயைத் தடுக்கும் செயல்பாட்டைச் செய்கிறது. ஆனால், இது ஏற்கனவே ஏற்பட்டத் தொற்றைக் குணப்படுத்தாது.

தடுப்பூசிகளை உருவாக்கும் இந்தச் செயல்முறை இதற்கு முன்பு மனிதர்களில் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் இதேத் தொழில்நுட்பம் புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.

FHI

## இந்தத் தடுப்பூசி எவ்வளவு நன்றாக வேலை செய்கிறது?

இந்தத் தடுப்பூசி தனித்துவ புதிய கொரோனா வைரஸால் ஏற்படும் நோயிலிருந்து பாதுகாக்கிறது. முதல் மற்றும் இரண்டாவது டோஸுக்குப் பிறகு கடுமையான நோய்க்கு எதிரான பாதுகாப்பு அதிகரிக்கிறது. கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவதற்கு எதிராக நல்ல பாதுகாப்பு பெற இரண்டு டோஸ் தேவை. பாதுகாப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது இன்னும் அறியப்படவில்லை. நாளடைவில் பாதுகாப்பு குறைந்துவிட்டால், ஒரு பூஸ்டர் டோஸ் போடுவது அவசியமாக இருக்கலாம். நோய்த்தொற்று மேலும் பரவாமல் தடுப்பூசிகள் முழுமையாக பாதுகாக்காது. எனவே, தற்போதைய தொற்று கட்டுப்பாட்டு ஆலோசனையைத் தொடர்ந்து பின்பற்றுவது முக்கியம்.

## பக்க விளைவுகள்

பெரும்பாலான பக்க விளைவுகள் தடுப்பூசி போட்ட முதல் நாளில் ஏற்படலாம். மற்ற தடுப்பூசிகளைவிட கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் போடுவதால் பொதுவான பக்க விளைவுகளே ஏற்படுகின்றன. அறிகுறிகள் பொதுவாக லேசானது முதல் மிதமானது மற்றும் சில நாட்களுக்குப் பிறகு தானாகவே சரியாகி விடும். ஆனால் சிலருக்கு மிகவும் கடுமையான அறிகுறிகள் தோன்றலாம். வயதானவர்களை விட இளைஞர்களுக்குப் பெரும்பாலும் சற்று கடுமையான பக்க விளைவுகள் ஏற்படலாம்.

தடுப்பூசி போட்டுக்கொண்ட பெரும்பாலான மக்களுக்கு ஊசி போடப்பட்ட இடத்தில் வலி மற்றும் வீக்கம் இருக்கும். மற்ற பொதுவான பக்கவிளைவுகளில் சோர்வு, தலைவலி, தசை மற்றும் மூட்டு வலிகள், குளிர், குமட்டல்/வாந்தி, அக்குள் மற்றும் வீங்கிய நிணநீர் சுரப்பிகள் மற்றும் காய்ச்சல் ஆகியவை அடங்கும். இரண்டாம் டோஸுக்குப் பிறகு இந்தப் பக்க விளைவுகள் மிகவும் பொதுவானவை.

தீவிர பக்க விளைவுகள் மிகவும் அரிதாக ஏற்படலாம். அரிதான பக்க விளைவுகளில் இதய வீக்கம் (மயோர்கார்டிடிஸ் மற்றும் பெரிகார்டிடிஸ்) அடங்கும். இவை பெரும்பாலும் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களிடையே, இரண்டாம் டோஸுக்குப் பிறகு நிகழ்கின்றன. மேலும், கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகள் மற்றும் இதய வீக்கம் போன்ற அரிய பக்க விளைவுகள் ஏற்பட்டால் உரிய சிகிச்சை மூலம் சரி செய்துவிட முடியும். இதுவரை அறியப்படாத அரிய பக்க விளைவுகள் இருப்பதையும், தடுப்பூசி போட்ட நீண்ட காலத்திற்குப் பிறகு பக்க விளைவுகள் தோன்றலாம் என்பதையும் நிராகரிக்க முடியாது.

## எனக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டால் நான் என்ன செய்வது?

உங்களுக்கு எதிர்பாராத, கடுமையான அல்லது நீடித்த பக்கவிளைவுகள் அல்லது அதற்கான அறிகுறிகள் ஏற்பட்டால், உரிய பரிசோதனை மற்றும் ஆலோசனைக்கு உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரப் பணியாளரைத் தொடர்பு கொள்ளுங்கள். இது தடுப்பூசி காரணமாக ஏற்பட்டதா இல்லையா என்பதற்கு அப்பாற்பட்டு இதனைச் செய்வது பொருந்தும். ஒரு தடுப்பூசி காரணமாக ஏற்பட்டதாக நம்பும் எந்தவொரு தீவிரமான அல்லது எதிர்பாராத பக்கவிளைவுகளைப் / எதிர்வினைகளைப் புகாரளிக்க சுகாதாரப் பணியாளர்கள் கடமைப்பட்டுள்ளனர். Helsenorge.no வழியாக நீங்களும் தெரியப்படுத்தலாம்.

## நிபந்தனைக்குட்பட்ட ஒப்புதல்

இந்தக் கொரோனா தடுப்பூசி பல ஆயிரம் மக்கள் பங்கு கொண்டு தடுப்பூசி போட்டுக் கொண்ட பெரிய அளவிலான ஆய்வுகள் மூலம் சோதிக்கப்பட்டது. மற்ற தடுப்பூசிகளைப் போலவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனாலும் மிகக் குறைவான கால அளவே காத்திருந்து பரிசோதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஒழுங்குமுறை அதிகாரிகள் தடுப்பூசிக்கு நிபந்தனைகுட்பட்ட ஒப்புதல் அளித்துள்ளனர். இதன் பொருள் தடுப்பூசியின் நன்மைகள், அதனால் ஏற்படும் அபாயத்தை விட அதிகமாக உள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு போதுமான தரவு உள்ளது, ஆனால் தடுப்பூசி உருவாக்குனர் ஆய்வுகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும். தேவைப்படும்போது அந்தத் தரவுகளை ஒழுங்குமுறை அதிகாரிகளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதாகும்.

## நான் எந்த தடுப்பூசி பெற்றேன்?

உங்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி போடப்பட்டவுடன், அது சிஸ்வாக் என்ற நார்வே நோய்த்தடுப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படும். உங்கள் தகவலை helsenorge.no இல் நீங்க எப்போதும் காணலாம்.

## நீங்கள் மேலும் தகவல்கள் அறிய விரும்புகிறீர்களா?

மேலும் தகவல்களை உங்கள் மருத்துவரிடம் அல்லது யாரேனும் சுகாதாரப் பணியாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் அல்லது நார்வேஜியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் இன் வலைத்தளம் - fhi.no/cip - இல் காணலாம்.